முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோர்தானா அணை 2000 ஆம் ஆண்டில் கட்டபபட்டுள்ளது. ஒரு அணை கட்டப்பட்ட பின்பு, அதில் நீர்மின்சாரம் தயாரிப்பதற்கு குறைந்தது 5 ஆண்டுகளாவது பாசனத்திற்காக விடப்படுகின்ற நீரின் அளவும், பாசனத்தின் அளவும் குறித்து ஆராய்ந்த பின்னரே அதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே 5 ஆண்டுகள் கழித்து, 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் அதுகுறித்து ஆராயப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 277, திரு. ப. நீலகண்டன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

277—

அமுதம் பல்பொருள் அங்காடி

***22733—திரு. ப. நீலகண்டன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தற்போது இயங்கிவரும் அரசு அமுதம் பல்பொருள் அங்காடிகளைப்போல் பிற நகரங்களிலும் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இயங்கிவரும் அரசு அமுதம் பல்பொருள் அங்காடிகளைப் போல பிற நகரங்களிலும் அமைக்கின்ற வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழாது.

2003 ஏப்ரல் 21]

திரு. ப. நீலகண்டன்: மாண்புமிகு இதய தெய்வம், எங்களுடைய குடும்ப தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் அமுதம் பல்பொருள் அங்காடிகள் சுமார் 24 செயல்பட்டு வருகின்றன. இந்த அங்காடிகள் மூலம் தரமான பொருட்கள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கின்றன. மேலும் பொதுமக்களுடைய பாராட்டையும் பெற்று வருகின்றன. அதேபோல முதல்கட்டமாக மாவட்டத் தலைநகரங்களில் அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டால், அரசின் சார்பு நிறுவனங்களுக்கு வருவாய் கிடைப்பதோடு மக்களுக்குத் தரமான பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கும். மேலும் தனியார் முதலாளிகளினுடைய விலையினை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு, அமுதம் அங்காடிகள் சிறப்புற செயல்பட்டு வருகின்றன. வெளிச்சந்தை விலையையும் கட்டுப்படுத்துவதற்கு உதவும். எனவே மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாவட்டத் தலைநகரங்களில் அரசு சார்பு நிறுவனமான அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தற்போது சென்னையில் 24 அமுதம் பல்பொருள் அங்காடிகளையும், கடலூர் மாவட்டத்தில் 6 அமுதம் பல்பொருள் அங்காடிகளையும் இயக்கி வருகின்றது. வெளிச்சந்தையில் விற்கப்படும் பொருட்களின் விலையை ஓரளவு கட்டுப்படுத்துவதற்காக அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டன. தற்போது தனியார்கள் பல்வேறு இடங்களில் வீதிகள்தோறும் திறந்து நடத்தி வருவதால், நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்திவரும் பல்பொருள் அங்காடிகள் இலாபம் ஈட்டாமல் இயங்கி வருகின்றன. என்றாலும் நிர்வாகக் காரணங்களை முன்னிட்டு அந்தக் கடைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் தற்போது மேற்கொண்டு புதிதாக கடைகளைத் திறக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 278, திரு. டி. பி. எம். மைதீன்கான், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.